# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2006 / 2007

## Held in May 2007

## ECS 1.11 – INTRODUCTION TO MICRO ECONOMICS

**எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. பொருளாதார முறைகள், பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினைகளிலன்றி, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளிலேயே வேறுபட்டு அமைந்துள்ளன." இக்கூற்றைக் கவனத்திற் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

    (அ) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எனக் கருதப்படுபவை யாவை?

    (ஆ) வெவ்வேறு பொருளாதார முறைகள் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வுகாண முற்படுகின்றன என்பதனை விளக்குக.

02. (அ) நுகர்வோர் நடத்தை பற்றிய ஆய்வில், பயனின் எண் பெறுமான அளவீடு (Cardinal), வரிசைசார் பயன்பாடு (ordinal) என்ற எண்ணக்கருக்களிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

    (ஆ) எல்லைப்பயன் ஆய்வில் 'நுகர்வோன் சமநிலை' என்பதனை விளக்குக.

    (ஆ) எல்லைப்பயன் ஆய்வு முறையின் குறைபாடுகளை விளக்குக.

03. சமபயன் கோட்டு ஆய்வினைக் கவனத்திற்கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

    (அ) சமபயன் கோட்டின் பண்புகள்

    (ஆ) வரவு செலவுத் திட்டக் கோடு

    (இ) எல்லைத் தொழில்நுட்பப் பதிலீட்டு விகிதம்; (MRTS)

    (ஈ) விலை நுகர்ச்சி வளைகோடு (PCC)

04. (அ) குறைந்து செல் எல்லை விளைவு விதியினையும் அளவுத்திட்ட விளைவுகள் விதியினையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக.

    (ஆ) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டின் மூன்று கட்டங்களையும் சுருக்கமாக விளக்குக.

05. (அ) குறுங்காலத்தில், நிறுவனமொன்றின் உற்பத்திச் செலவுகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. தரப்பட்ட தரவுகளை ஆதாரமாகக் கொண்டு ஏனைய இடைவெளிகளை நிரப்புக. இந்நிறுவனத்தின் நிலையான செலவு ரூபா 60 எனக் கொள்க.

| Q | TFC | TVC | TC | AFC | AVC | AC | MC |
|---|---|---|---|---|---|---|---|
| 0 | | | | | | | |
| 1 | | | 100 | | | | |
| 2 | | | | | | 120 | |
| 3 | | | 225 | | | | |
| 4 | | | 340 | | | | |
| 5 | | 490 | | | | | |
| 6 | | | | | 110 | | |
| 7 | | | 1050 | | | | |
| 8 | | | | | | | 440 |

(ஆ) மொத்த உற்பத்திக் கோட்டிலிருந்து சராசரி உற்பத்தி, எல்லை உற்பத்தி என்பவற்றை எவ்வாறு பெற்றுக்கொள்வீர் எனக் காட்டுக.

06. (அ) குறுங்கால சராசரி செலவு வளை கோட்டையும் நீண்டகால சராசரிச் செலவு வளை கோட்டையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(ஆ) இவ்விரு செலவு வளை கோடுகளையும் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை ஆராய்க.

07. நிறைபோட்டிச் சந்தையொன்றைக் கவனத்திற்கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) எல்லை வருமானமும் சராசரி வருமானமும்

(ஆ) நிறுவனத்தின் சமநிலை

(இ) சாதாரண இலாபமும், அசாதாரண இலாபமும்

(ஈ) குறுங்கால நிரம்பல் வளை கோடு

08. பின்வருவனவற்றிற்குச் சிறு குறிப்பெழுதுக

(அ) நிலைமாறும் பொருளாதாரங்கள்

(ஆ) வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி

(இ) தனியுரிமை நிறுவனத்தின் குறுங்காலச் சமநிலை

(ஈ) பொருளியல் ஆய்வில் ‘அருமை’ யின் முக்கியத்துவம்

***